பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 32 சனிக்கிழமை 17.09.2022 கதிர் 203

## திருமலையில் ஒருவர் வெட்டிப் படுகொலை!

திருகோணமலையில் தனிப்பட்ட தகராறு காரணமாக நபர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை - கண்டி வீதி பெதிஸ்புர பிரதேசத்தில் இன்று அதிகாலை இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். ☞2

# மகசினில் அரசியல் கைதிகள் முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டம் இடைநிறுத்தம்!


### வடக்கு ஆளுநர் நேரில் வழங்கிய வாக்குறுதியையடுத்து

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

கொழும்பு – மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தமிழ் அரசியல் கைதிகள், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வழங்கிய வாக்குறுதியையடுத்து உண்ணாவிரதப் போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளனர். ☞2



## தியாக தீபம் திலீபன் நினைவேந்தலின் 3ஆம் நாள் நிகழ்வு யாழ். பல்கலையில்



தியாக தீபம் திலீபன் நினைவேந்தலின் மூன்றாம் நாள் நிகழ்வு இன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரதான நினைவுத் தூபியில் நடைபெற்றது. ☞2

## நூறு வீதம் ஜனநாயகம் இலங்கையில் இல்லை!

### மஹிந்த தேசப்பிரிய குற்றச்சாட்டு



இலங்கையில் இன்று நூறு சதவீதம் ஜனநாயகம் இல்லை. அரசியல் கட்சிகளுக்குள் உள்ளக ஜனநாயகம் இன்மையே இதற்கான பிரதான காரணியாகும்.

- இவ்வாறு தேர்தல்கள்ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இதனைத் தெரிவித்த அவர். மேலும் குறிப்பிடுகையில்,

சிறந்த அறிவுள்ள இளைஞர்கள் காணப்படுகின்ற போதிலும், அவர்களுக்குவாய்ப்புக்கள் வழங்கப்படுவதில்லை. ஆனால், மறுபுறம் வயதானவர்கள் தொழிலிருந்து ஓய்வு பெற வேண்டும் என்றும் கூறப்படுகின்றது.

60 வயதில் அரச உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற ☞2

## வன்னியசிங்கத்தின் நினைவேந்தல்; நீர்வேலியில் இன்று அஞ்சலி நிகழ்வு



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் குமாரசாமி வன்னியசிங்கத்தின் 53 ஆவது நினைவு தினம் இன்றாகும். இதையொட்டி யாழ்ப்பாணம் - நீர்வேலியில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு இன்று மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. ☞2

## மகாராணிக்கு அஞ்சலி செலுத்த இன்று லண்டன் பறந்தார் ரணில்



மறைந்த இரண் டாம் எலிசபெத் மகாரா ணியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற் காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று அதிகாலை இங்கி லாந்து பயணமானார். ☞2

## வாஸின் மனைவிக்கு பிடியாணை

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவின் மனைவியான சியாமலி குணவர்தன மற்றும் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் இந்திக புஷ்பகுமார ஆகியோருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவர்களை உடனடியாகக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா அறிவித்துள்ளார்.

மாலபே சைட்டம் நிறுவனத்தின் மாணவரான ☞2

## இலங்கைக்கு ஜப்பான் மேலும் உதவி

இலங்கைக்கு மேலும் 3.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை அவசர உதவியாக வழங்க ஜப்பான் அரசு தீர்மானித்துள்ளது. ஏற்கனவே கடந்த மே 20ஆம் திகதியன்று ☞2

## மீண்டும் பெரும் போராட்டம் வெடிக்கும்!

### சஜித் அணி பகிரங்க எச்சரிக்கை



இலங்கையில் தற்போது அமைதியாகியுள்ள மக்களின் ஆர்ப்பாட்டம் பின்னர் பாரதூரமான போராட்டமாக வெடிக்கும். சுனாமி ஏற்பட முன்னர் கடல் அலைகள் அமைதியடைவதைப் போன்று, தற்போது தணிந்துள்ள ஆர்ப்பாட்டங்கள் பாரிய அலையாக மீண்டும் வெளியாகும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார். ☞2

## கடலில் உடைந்து விழுந்தது இரும்புப் பாலம்; அனல் மின்சார நிலையத் தொழிலாளி சாவு!



நுரைச்சோலை அனல் மின்சார நிலையத் தொழிலாளர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

புத்தளம் நுரைச்சோலை 'லக் விஜய' அனல் மின்சார நிலையத்தில் அமைந்துள்ள இரும்புப் பாலம் உடைந்து கடலில் வீழ்ந்தபோது இரும் புப் பாலத்தை திருத்தும் பணியில் ஈடுபட்ட ☞2

## மகாராணிக்கு..........

அதிகாலை 3.33 மணிக்கு டுபாய்க்குப் புறப்பட்டுச் சென்ற அவர், அங்கிருந்து இலண்டன் பயணமானார்.

ஜனாதிபதி ரணிலுடன் 8 பேர் இந்தப் பயணத்தில் இணைந்துள்ளனர்.

பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத் சமீபத்தில் ஸ்கொட்லாந்தில் உள்ள பால்மோரல் கோட்டையில் காலமானார்.

அவரது உடலம் தற்போது பிரிட்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மகாராணிக்கு இறுதி மரியாதை செலுத்த கிட்டத்தட்ட பல கிலோமீற்றர் நீளமான நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்கின்றனர்.

## தியாக திபம்..........

(முதலாம் பக்கத் தொடச்சி)

இதன்போது ஈகச் சுடரேற்றப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## திருமலையில்..........

(முதலாம் பக்கத் தொடச்சி)

திருகோணமலையைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

கொலைச் சந்தேகத்தின் பேரில் 28 வயதுடைய நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

## மகசினில்..........

(முதலாம் பக்கத் தொடச்சி)

இந்தத் தகவலை வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா இன்று கொழும்பு - மகசின் சிறைச்சாலைக்கு நேரில் சென்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடி விரைவில் விடுதலைக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வாக்குறுதியளித்தார்.

இதையடுத்து தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் இடைநிறுத்தப்பட்டது என்று உறவினர்கள் தெரிவித்ததுடன் வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாகத் தாங்கள்முன்னெடுத்தஉண்ணாவிரதப் போராட்டத்தையும் கைவிடுவதாகக் கூறினர்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்ட உறவினர்கள் இன்று தொலைபேசி வாயிலாக மகசின் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் அரசியல் கைதிகளுடன் தொடர்புகொண்டு பேசியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 2017ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதிகளில்பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட 12பேர், தமது விடுதலையை வலியுறுத்தி கொழும்பு மகசின் சிறைச்சாலையில் இம்மாதம் 6ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் அவர்களுக்கு ஆதரவாக அவர்களின் உறவினர்கள் நேற்றுக் காலை முதல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டதை ஆரம்பித்திருந்தனர்.

மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளின் உடல்நிலை மோசமாவதைக் கருத்தில்கொண்டு தகுந்த வாக்குறுதியை அவர்களுக்கு வழங்கி உணவுத் தவிர்ப்பை முடிவுறுத்தி பிணையிலோ அல்லது பொதுமன்னிப்பிலோ விடுதலை செய்யுமாறு போராட்டத்தில் ஈடுபட்ட உறவினர்கள், ஆளுநரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நூறு வீதம்..........

(முதலாம் பக்கத் தொடச்சி)

வேண்டு மெனில், அந்த வயதைக் கடந்த அரசியல்வாதிகள் ஏன் இன்னும் ஓய்வுபெறவில்லைஎன்பதுதற்போதைய பிரபல கோமாகவுள்ளது.

இளைஞர்களுக்கு அதிகாரங்கள் கிடைக்கப் பெறாமலுள்ளமைக்கான காரணம் என்ன? அரசியல் கட்சிகளுக்குள் உள்ளக ஜனநாயகம் இன்மையே இதற்கான பிரதான காரணியாகும்.

அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு வரம்பற்ற அதிகாரம் காணப்படுகின்றது. அரசியல் கட்சிகளின் கிளை அலுவலகங்களிலிருந்து இளைஞர்கள் அரசியலுக்குள் உள்வாங்கப்படுவதில்லை.

நேர்முகத்தேர்வுகளின் போது பெண்களையும் உள்ளடக்குமாறு கட்சி ஒன்றின் தலைவரிடம் நான் கோரிக்கை விடுத்தேன். அதற்குப் பதிலளித்த குறித்த நபர் , 'ஒருவர் அல்ல. 5 பெண்களைக் கூட நேர்முகத்தேர்வை நடத்துவதற்கு நியமிக்க முடியும். ஆனால், இறுதித் தெரிவு எம் கைகளிலேயே உள்ளது' என்றார்.

நகங்களிலிருந்து தலைமயிர் வரை நாம் ஜனநாயகமுடையவர்களாகக் காணப்பட வேண்டும். ஒவ்வொரு வீடுகளிலிலும் ஜனநாயகம் வலுப்படுத்தப்பட்டால் கட்சி ஜனநாயகமுடையதாகக் காணப்படும்.

கட்சிகள் ஜனநாயகமுடையவையாக மாற்றமடையும்போது, நாட்டிலும் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படும். வாக்களிப்பது உங்களது உரிமை, எனவே வந்து வாக்களியுங்கள் என்று பிரசாரம் செய்பவர்கள், மறுபுறும் ஏதேனும் செய்தால் துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் என்றும் எச்சரிக்கின்றனர்.

நாட்டில் நூற்றுக்கு நூறு சதவீதம் ஜனநாயகம் இல்லை. இன்று பிரபுக்களின் வாதமே காணப்படுகின்றது. 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வேண்டாம் என்ற கோத்துக்குப் பகிரங்கமாக எதிர்ப்பை வெளிப்படுத்தியவன் நான்.

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் உள்ளிட்ட இளைஞர் - யுவதிகளுக்கு ஆதரவாகவே நான் செயற்பட்டேன் என்பதை பலரும் அறிவார்கள். ஆனால், வேட்புமனுக்களை பொறுப்பேற்றவன் நான் எனக் கூறி, எனது வீட்டையும் தாக்குவதற்கும் சிலர் வருகை தந்தனர் - என்றார்.

## வன்னியசிங்கத்தின்..........

(முதலாம் பக்கத் தொடச்சி)

இலங்கைத் தமிழரசுக் கட்சியை உருவாக்கப் பங்களித்த முக்கியஸ்தர்களில் ஒருவராக விளங்கிய வன்னியசிங்கத்தின் இந்த நினைவு தின நிகழ்வில் முன்னாள் நாடாமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே சிவஞானம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதேவேளை, இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

## வாஸின்..........

(முதலாம் பக்கத் தொடச்சி)

நிபுண ராமநாயக்கவைப் பலவந்தமாகக் கடத்திச் சென்று, குரூரமாகத் தாக்குதல் மேற்கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின்கீழ்தாக்கல்செய்யப்பட்டுள்ள வழக்கின் ஆறாவது பிரதிவாதியாக சியாமலி குணவர்தன பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வாஸ் குணவர்தன மற்றும் அவரின் மகனான ரவிந்து குணவர்தன உள்ளிட்ட மேலும் 6 பிரதிவாதிகள் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

எனினும், இரண்டு பிரதிவாதிகள் மன்றில் ஆஜராகாமையால், வழக்கு விசாரணையை எதிர்வரும் நவம்பர் மாதம் 28ஆம் திகதி வரை ஒத்திவைத்த நீதிவான், இரண்டு பிரதிவாதிகளுக்கும் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## மீண்டும்..........

(முதலாம் பக்கத் தொடச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அமெரிக்க செனட் சபையில் இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமானவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

சர்வதேசத்தில் இலங்கைக்கு எதிராக இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்ற நிலையிலும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பழிவாங்கும் செயற்பாடுகளை அரசு இன்னும் கைவிடவில்லை.

அரசின் பழிவாங்கல் செயற்பாடுகளைநாம்கடுமையாகஎதிர்க்கின்றோம். தற்போது அமைதியாகியுள்ள மக்களின் ஆர்ப்பாட்டம் பின்னர் பாரதூரமான போராட்டமாக வெடிக்கும்.

சுனாமி ஏற்பட முன்னர் கடல் அலைகள் அமைதியடைவைப் போன்று, தற்போது தணிந்துள்ள ஆர்ப்பாட்டங்கள் பாரிய அலையாகமீண்டும்வெளியாகும்.

நாட்டில் சிறந்த ஆட்சியை உருவாக்குவதற்கு ஊழல், மோசடிகள் ஒழிக்கப்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசில் ஊழல், மோசடிகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

சர்வகட்சி அரசை அமைப்பதற்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. ஆனால், தற்போதைய அரசுக்குள்ளேயே அமைச்சர்கள் ஒற்றுமையின்றி செயற்படுகின்றனர் என்று தெரியவந்துள்ளது.

நிலக்கரி இறக்குமதியில் ஏற்பட்டுள்ள சிக்கலால் அடுத்த மாதம் 10 - 12 மணித்தியாலங்கள் மின்சாரத்தைத் துண்டிக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

அரசால் தொடர்ச்சியாக மக்களுக்கு இவ்வாறான நெருக்கடிகளே ஏற்படுத்தப்படுகின்றன. உள்ளூராட்சி சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எந்தவொரு தேர்தலிலும் களமிறங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே உள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெரும்பான்மையான தொகுதிகளை நாம் கைப்பற்றுவோம். பொதுத் தேர்தலில் எமது வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் அமையும் - என்றார்.

## கடலில்..........

(முதலாம் பக்கத் தொடச்சி)

தொழிலாளரே கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இரும்புப் பாலத்தைத் திருத்தி, வர்ணம் பூசும் வேளையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆனமடுவ, பள்ளம பிரதேசத்தைச் சேர்ந்த, இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஹேமந்த ஹர் (வயது 32) என்பவரே கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவரோடு திருத்தும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்கள் இரும்புப் பாலம் உடைந்து கீழே விழுந்த போது உடனடியாகச் செயற்பட்டு அவர்களும் கடலில் பாய்ந்து அவரைக் காப்பாற்றும் முயற்ச்சியில் ஈடுபட்டனர். எனினும், அந்த முயற்சி பலனளிக்கவில்லை.

இதையடுத்து கடற்படையினரும், அனல் மின்சாரத்தில் பணிபுரியும் சுழியோடிகளும் இணைந்து அவரது சடலத்தைப் தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## இலங்கைக்கு..........

(முதலாம் பக்கத் தொடச்சி)

3 மில்லியன் டொலர்களை ஜப்பான், இலங்கைக்கு மனிதாபிமான உதவியாக வழங்கியிருந்தது

இந்நிலையில், நேற்றுவழங்கப்பட்ட 3.5 மில்லியன் டொலர்களையும் சேர்த்து 6.5 மில்லியன் டொலர்களை ஜப்பான், இலங்கைக்கு தற்போதைய பொருளாதார நெருக்கடிக்காக வழங்கியுள்ளது.

இந்த உதவிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் ஆகியவற்றின் ஊடாக வழங்கப்படுகின்றன.

இதேவேளை, ஜப்பானுடன் நீண்ட கால மற்றும் இணக்கமான உறவுகளைக் கொண்டுள்ள இலங்கை மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைப் போக்குவதற்கு இந்த உதவி பங்களிக்கும் என்று ஜப்பான் அரசு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்தியாவின் நிலைப்பாடு

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை, இந்தியாவின் ஆதரவைப் பெறும் பட்சத்தில் மேலும் பத்து நாடுகள் இலங்கையின் பக்கம் சாயும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் அரசியல் ஆய்வாளருமான பேராசிரியர் பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்திருக்கிறார்.

சரியான கணிப்பீடுதான். ஆனால் ஜெனிவாவில் இலங்கையை இந்தியா வெளிப்படையாக ஆதரித்து நிற்கும் நிலைப்பாடு வருமா என்பதுதான் கேள்வி.

இலங்கை தொடர்பாக மேற்கு நாடுகள் சமர்ப்பித்திருக்கும் புதிய பிரேரணை வரும் ஒக்ரோபர் ஏழாம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பெரும்பாலும் வாக்கெடுப்புக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மொத்தம் 47 அங்கத்துவ நாடுகள் வாக்கெடுப்பில் பங்குபற்றும். 23 அல்லது 24 நாடுகளின் ஆதரவைத் திரட்டினால் மேற்குலகின் பிரேரணையை இலங்கையால் தோற்கடிக்க முடியும்.

இலங்கைக்கு ஏற்கனவே பத்து முதல் பதின்மூன்று நாடுகளின் ஆதரவு உறுதியாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இலங்கை இந்த வாக்கெடுப்பில் வெற்றிபெற வேண்டுமானால் அதற்கு இந்தியாவின் ஆதரவு மிக முக்கியம் என்று பேராசிரியர் பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்திருக்கின்றார்.

இந்தியா, இலங்கையை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுக்குமானால் மேற்குலகத்திலும் ஆபிரிக்கா மற்றும் கரீபியன் தீவுகளிலும் உள்ள மேலும் சுமார் பத்து நாடுகள் இலங்கைக்கு நேசக்கரம் நீட்டும் என்றும், இந்தியா நடுநிலைமை வகித்தால் மேற்கு நாடுகளின் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேறும் என்றும் அவர் கூறுகின்றார்.

ஏனைய நாடுகள் போல யுத்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் நீதி விசாரணை நடத்துதல், உண்மைகளைக் கண்டறிதல், பொறுப்புக் கூறலை நிலைநாட்டுதல் போன்றவற்றை வெளிப்படையாக இந்தியா வற்புறுத்தாமல் விட்டாலும் தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும், அதற்காக மாகாணசபை முறைமை முழு அளவில் நடைமுறைப்படத்தப்பட வேண்டும் என்பதில் இந்தியா திட்டவட்டமாகவும் உறுதியாகவும் நிற்கின்றது.

இப்போதுகூட கடந்த திங்களன்று இலங்கை தொடர்பான விடயத்தில் ஜெனிவாவில் உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி அதையே வலிமையாகச் சுட்டிக்காட்டியிருந் தார். யுத்தம் முடிவடைந்து பதின்மூன்று வருடங்கள் கழிந்தும் அதிகாரப் பகிர்வு விடயத்தில் கொழும்பு காத்திரமாக எதுவும் செய்யவில்லை என்பது தொடர்பில் தனது மனக்குறையை அன்றும் இந்தியா பிரதிபலித்தது.

முழு அளவில் 13ஆவது திருத்தத்தை நடமுறைப்படுத்துவதில் தொடங்கி, தமிழர்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளைத் தீர்க்கும் வகையில் அதிகாரப் பரவலாக்கல் நடவடிக்கை தெளிவான, காலவரையறை குறிப்பிட்ட ஒரு கால அட்டவணையை அல்லது வரைபடப் பாதையை கொழும்பு ஆட்சிப் பீடம் முன்வைத்து, அதை முன்னெடுக்கப் பகிரங்க உறுதி எதனையும் ஜெனிவாவில் அறிவிக்காதவரை இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டுவரப்படும் பிரேரணையை இந்தியா எதிர்ப்பதோ, இலங்கையை ஆதரிப்பதான நிலைப்பாட்டை எடுப்பதோ நடக்கக் கூடிய காரியம் அல்ல.

# சிங்களவருக்கு ஒரு நியாயம்; தமிழருக்கு வேறு! இதுவே இந்த நாட்டில் காணப்படுகின்றது!

## சாணக்கியன் எம்.பி. ஆக்ரோஷம்



இலங்கையில், சிங்களவர்கள் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் செய்தால் ஒரு சட்டமும் தமிழர்கள் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் செய்தால் ஒரு சட்டமும்தான் நடைமுறைப்படுத்தப்படுகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கின் தெரிவித்தார்.

மகசின் சிறைச் சாலையில் உண்ணா விரதமிருக்கு கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்;று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டு மகசீன் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற உறவுகளுக்கு ஆதரவாக நாங்களும் மட்டக்களப்பிலே அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

2018 இற்குப் பிற்பாடு கைது செய்யப்பட்ட உறவுகள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். அவர்களுக்கு உடனடியாக பிணை வழங்கப்படவேண்டும். அதேநேரத்தில் நீண்டகாலமாக சிறையில் இருக்கும் அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.

பயங்கரவாதத் தடுப்பு சட்டம் ஊடாகத் தொடர்ச்சியாக ஆளும்தரப்பினர் கைதுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே அந்தக் கைதுகளைச் செய்வதற்கான இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இனி இருக்கக் கூடாது.

இந்த அரசாங்கத்துக்கு வேண்டப்பட்டவர்களுக்கு கடந்த காலத்தில் 3 ஜனாதிபதிகள் பொதுமன்னிப்பு வழங்கியுள்ளனர்.

ஆனால் இந்த தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக இன்னமும் இழுத்தடிப்புக்களே மேற்கொள்ளப்படுகின்றன.

ஐ.நா கூட்டத் தொடரிலே கலந்துகொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, பொருளாதாரக் குற்றங்கள் இடம்பெறவில்லை என்றும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

உண்மையில், இந்தப் பொருளாதாரக் குற்றங்களுக்கு அலி சப்ரியும் பொறுப்பானவர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் நீதி அமைச்சராக இருந்த இவர், தான் 20 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தார்.


இன்று பொருளாதார நெருக்கடியால் மக்கள் நாட்டிலே வாழமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதற்கு ராஜபக்ஷ குடும்பமே காரணமாகும்.

போர்க்குற்றங்களை மூடிமறைத்தமை போன்று இந்த பொருளாதாரக் குற்றங்களை மூடி மறைக்க முடியாது.


இதற்குப் பொறுப்புக் கூறவேண்டிய இவர்கள் தப்பி ஓடமுடியாது. இதனை அமைச்சர் அலி சப்ரியும் உணரவேண்டும்.– என்றார்.

# விளையாட்டுத் துறையை மேம்படுத்துகின்றமை தொடர்பாக முன்னாள் விளையாட்டு அமைச்சர்களுடன் கலந்துரையாடல்!

## நாமல் பங்கேற்கவில்லை







விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, இலங்கையின் உள்ளூர் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவது தொடர்பாக முன்னாள் விளையாட்டு அமைச்சர்கள் குழுவுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இது தொடர்பில் முன்னாள் விளையாட்டு அமைச்சர்கள் வழங்கிய யோசனைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கடந்த புதன்கிழமை இந்த சந்திப்பு இடம்பெற்றதாக விளையாட்டுத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, காமினி லொகுகே, லக்ஷ்மன் கிரியெல்ல, ஜீவன் குமாரனதுங்க, தயாசிறி ஜயசேகர, நவீன் திஸாநாயக்க, பைசர் முஸ்தபா, ஹரின் பெர்னாண்டோ மற்றும் தேசிய விளையாட்டு சபையின் தலைவர் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

எவ்வாறிருப்பினும் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக் ஷ இந்த சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# திருமண நிகழ்வில் கடும் மோதல்; பலர் வைத்தியசாலையில் சேர்ப்பு!

## பாணந்துறையில் களேபரம்



பாணந்துறை சுற்றுலா ஹோட்டலில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற திருமண நிகழ்வின் போது ஏற்பட்ட வாக்குவாதத்தில் 6 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும், பத்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். மணமகன் தரப்பில் இருந்து வந்த கண்டிமற்றும்கடுகண்ணாவபிரதேசவாசிகள் குழு வொன்றே இவ்வாறு கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது தாக்கப்பட்ட ஹோட்டல் பணியாளர்கள் 5 பேரும் மலர் அலங்காரம் செய்ய வந்த ஒருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நீச்சல் குள சேவைக்கு முன்பதிவு செய்யப்படாத போதிலும், மது அருந்திவிட்டு சிலர் அங்கு இறங்கினர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபர்களை கைது செய்ய பெரும் முயற்சி எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
சனிக்கிழமை 17.09.2022

# ஐ.நாவில் உக்ரைன் அதிபரின் காணொலி உரைக்கு இந்தியா உட்பட நூறுக்கும் அதிக நாடுகள் ஆதரவு



ஐ.நாசபைகூட்டத்தில்,'உக்ரைன்அதிபர்ஜெலென்ஸ்கி காணொலி மூலம் உரையாற்ற அனுமதிக்கும்' விட யத்தில் இந்தியா உட்பட நூறுக்கும் மேற்பட்ட நாடுகள் உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கிக்கு ஆதரவாக வாக்களித்தன.

ஐ.நா.பொதுச் சபையில் உலகத் தலைவர்களின் வருடாந்திர கூட்டம் அடுத்த வாரம் நடைபெற உள்ளது.

செப்டம்பர் 21 ஆம் திகதியன்று நடைபெறும் உயர் மட்ட ஐ.நா. கூட்டத்தில் உலகத் தலைவர்கள் மத்தியில் உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி காணொலி மூலம் உரையாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், உலகத்தலைவர்களிடம்உக்ரைன்அதிபர்ஜெலென்ஸ்கி காணொலிமூலம்உரையாற்றஅனுமதிக்குமாறுஐ.நா. பொதுச் சபையில் உக்ரைன் வலியுறுத்தி உள்ளது. இது தொடர்பான ஒரு முன்மொழிவை 193 உறுப்பினர் களைக் கொண்ட ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை வெள்ளிக்கிழமை அன்று பரிசீலனை செய்தது.

போர் காரணமாக ஜெலென்ஸ்கி பொதுச் சபைக் கூட்டங்களில் நேரில் பங்கேற்க முடியாது என்று உக் ரைன் விவகாரங்களுக்கான ஐ.நா. குழு தெரிவித் துள்ளது. ஆனால் உக்ரைனால் உருவாக் கப்பட்ட இந்த உத்தேச முன்மொழிவு முடிவின் மீது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என ரஷ்யா அழைப்பு விடுத்தது. இது தொடர்பாக, ரஷ்யாவின் ஐ.நா. தூதர் வசிலி நெபென் சியா புதன்கிழமை வீடியோ மூலம் ஜெலென்ஸ்கியை பேச அனுமதிப்பதை ரஷ்யா எதிர்க் கிறது என்றார்.

இதனையடுத்து நேற்று ஐ.நா சபை கூட்டத்தில், 'உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி காணொலி மூலம் உரையாற்ற அனுமதிக்கும்' விடயத்தை நிறைவேற்ற வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 193 நாடுகளை கொண்ட சபையில், இந்தியா உட்பட 100க்கும் மேற்பட்ட நாடுகள் உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கிக்கு ஆதரவாக வாக்களித்தன. பெலாரஸ், கியூபா, எரித்தி ரியா, ரஷ்யா மற்றும் சிரியா உட்பட ஏழு நாடுகள் எதிராக வாக்களித்தன மற்றும் 19 நாடுகள் வாக்களிக்கவில் லை. தீர்மானத்துக்கு ஆதரவாக 101 வாக்குகள் கிடைத்ததால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## மேலும் அறுபது கோடி டொலர்களுக்கு உக்ரைனுக்கு அமெ. இராணுவ உதவி!



வொஷிங்டன்,செப்.17

உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி மாத இறுதி யில் இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் ரஷ்யா தொடங்கிய போர் 6 மாதத்தை கடந்துள் ளது. போரினால் பாதிப்பு அடைந்துள்ள உக்ரை னுக்குராணுவ ஆயுத உதவிகளை அமெரிக்கா தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்நிலையில், உக்ரைனுக்கு மேலும் 60 கோடி டொலர்கள் இராணுவ ஆயுத உதவியை அமெரிக்கா அறி வித்துள்ளது.

ரஷ்யாவிற்கு எதிரான போரில் உக்ரேனி யிராணுவத்திற்கு உதவுவதற்கான இந்த நடவடிக்கை குறித்த அறிவிப்பு விரைவில் வெளி யாகும்எனஅமெரிக்கஅதிகாரிகள்தெரிவித்தனர். ராக்கெட் ஏவுகணை ஆயுதங்கள் உள்ளிட்ட பல ஆயுதங்கள் இராணுவ ஆயுத உதவியின் கீழ் உக்ரைனுக்கு வழங்கப்படும். வெள்ளை மாளிகை இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. ரஷ்யாவிற்கு எதிரான போரில் உக்ரைனுக்கு உதவியாக இதுவரை 1,500 கோடி டொலருக்கும் அதிகமான இராணுவ உதவியை அமெரிக்கா வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல் ஏவுகணையில் சிரிய வீரர்கள் ஐவர் சாவு



டமாஸ்கஸ்,செப்.17

இஸ்ரேல் வான்வழி நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் சிரி யாவை சேர்ந்த ஐந்து இராணுவ வீரர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்

சிரியா நாட்டில் கிளர்ச்சியாளர்கள் அரசுக்கு எதிரான போரில் ஈடுபட்டு வருகின்றனர். பல ஆண்டுகளாக நீடித்து வரும் இந்த போரால் பெண்கள், குழந்தைகள் உள்பட அந்நாட்டின் லட்சக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனினும், போர் முடிவுக்கு வராமல் நீடித்து வருகிறது.

சிரியாவின் சனா செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், எதிரி நாடான இஸ்ரேல் வான்வழியே நடத்திய ஏவுகணை தாக்குதல் டமாஸ்கஸ் நகரில் சில பகுதிகளை இலக்காக கொண்டி ருந்தது. இந்நிலையில், இஸ்ரேல் வான்வழி நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் சிரியாவை சேர்ந்த 5 இராணுவ வீரர்கள் பரிதாப மாக உயிரிழந்தனர். பொருள்களும் சேதமடைந்துள்ளன என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## ரஷ்யப் படைகள் வெளியேறிய இடத்தில் 400 பேரின் புதைகுழிகள் கண்டுபிடிப்பு







கீவ்,செப்.17

ரஷ்யாவின் பிடியில் இருந்து மீட்கப்பட்ட உக்ரை னின் இசியம் நகரில் நானூறுக்கும் மேற்பட்டோர் கொன்று புதைக்கப்பட்டுள்ளனர். அங்கு புதைக்கப்பட் டோரை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது.

உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் தி கதி ரஷ்யா போர் தொடுத்தது. இன்று வரை நீடிக்கும் இந்தப் போரில் ஏராளமான உக்ரைன் வீரர்கள், பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். உக்ரைன் இராணுவமும் உரிய பதிலடி கொடுத்து வருகிறது. ரஷ்யா கைப்பற்றிய பல இடங்களை உக்ரைன் மீட்டுள்ளது. மீட்கப்பட்ட பகுதிகளை சமீபத்தில் உக்ரைன் அதிபர் பார்வையிட்டார்.

அப்போது உக்ரைனின் இசியம் நகரில், 400க்கும் மேற்பட்டோர் கொன்று புதைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு, புதைக்கப்பட்டோரை அடையாளம் காணும் பணி நடக்கிறது. இந்நிலையில் உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி கூறிய தாவது:-


ரஷ்யா நடத்திய இந்தப் படுகொலைகளை விரைவில் ஆதாரத்துடன் அம்பலப்படுத்துவோம். மீட்கப்பட்ட நகரங்களை ஆய்வு செய்தேன். ரஷியப் படையினர் கோர தாண்டவம் ஆடியுள்ளனர். பொதும க்களையும்,ராணுவ வீரர்களையும் சித்ரவதை செய்து கொலை செய்துள்ளனர்.

இசியம் நகரில் மிகப்பெரிய குழியில், 400க்கும் மேற்பட்ட உடல்கள் புதைக்கப்பட்டு உள்ளன. போர் விதிமுறைகளை மீறி ஏராளமான பொதுமக்களை ரஷ்யப் படையினர் கொன்று குவித்துள்ளனர். ரஷியாவின் போர்க்குற்றங்களை ஆதாரத்துடன் விரைவில் அம்பலப்படுத்துவோம். கொலை செய் யப்பட்டோரை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது என தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# போரை நிறுத்துமாறு புடினை நேரில் வற்புறுத்திய பிரதமர் மோடிக்கு அமெரிக்க ஊடகங்கள் பாராட்டு



வொஷிங்டன்,செப்.17

உக்ரைன் மீதான போரை நிறுத்துமாறு ரஷ்ய அதிபர் புடினிடம் இந்தியப் பிரதமர் மோடி வலியுறுத்தியமையை சிலாகித்துள்ள அமெரிக்க ஊடகங்கள் இந்த இரு தலைவர்களின் உரையாடல் தொடர்பில் பிரதமர் மோடிக்குப் பாராட்டும் தெரிவித்துள்ளன.

பிரதமர் மோடி ரஷிய அதிபர் புதினை கண்டித்துள்ளார் என்று வாஷிங் டன் போஸ்ட் செய்தி வெளியிட் டுள்ளது.

இந்தியா உள்ளிட்ட 8 நாடுகளை உறுப்பினர்களாக கொண்டுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 2 நாள் உச்சி மாநாடு, உஸ்பெகிஸ் தான் நாட்டின் சமர்கண்ட் நகரில் நடந்தது. இந்த மாநாட்டில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், சீன அதிபர் ஜின்பிங் மற்றும் பாகிஸ்தான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜி கிஸ்தான், உஸ்பெகிஸ்தான் தலை வர்களுடன் பிரதமர் மோடி நேற்று கலந்து கொண்டார்.

இந்த மாநாட்டின் இடையே ரஷ்ய அதிபர் புடினைச் சந்தித்து பிரதமர் மோடி இரு தரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா போர் தொடுத்த பின்னர் இரு தலைவர்களும் சந்தித்துப் பேசியமை இதுவே முதல் முறை ஆகும். ரஷ்ய அதிபர் புடினிடம் பிரதமர் மோடி கூறுகையில்- இது போருக்கான காலம் அல்ல. நான் உங்களிடம் தொலைபேசி அழைப்பின்போது பல முறை இதைப் பேசி இருக்கிறேன். ஜனநாயகம், ராஜதந்திரம், பேச்சுவார்த்தை ஆகியவை உலகை ஒன்றாக வைத்திருக்கும் என வலியுறுத்தினார்.

அதற்கு, உங்கள் கவலைகள் பற்றி எனக்குத் தெரியும். இவை அனைத்தும் விரைவில் முடிவுக்கு வர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம் என்று மோடியிடம் புடின் கூறினார்.

இந்த இரு தலைவர்கள் உரையாடல் குறித்து பிரதமர் மோடிக்கு அமெரிக்க ஊடகங்கள் பாராட்டு தெரிவித்துள்ளன. (பிரதமர்) மோடி உக்ரைனில் நடந்த போர் தொடர்பாக (ரஷ்ய அதிபர்) புடினைக் கண்டித்துள்ளார் என்று வொஷிங்டன் போஸ்ட் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஒரு அதிர்ச்சியூட்டும் பொது கண்டனமாக பிரதமர் மோடி புடினிடம் பேசினார் என்று அமெரிக்க நாளிதழ் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் தலைவர் புடினிடம் இப்போது இது போருக்கான காலம் அல்ல என்று கூறுகிறார் என்று நியூயார்க் டைம்ஸ் தனது தலைப்பில் கூறியது. தி வொஷிங்டன் போஸ்ட் மற்றும் தி நியூயோர்க் டைம்ஸ் ஆகியஇரண்டுசெய்திநிறுவனங்களின்வலைப்பக்கத்திலும் இன்றைய தினம் இது முதன்மை செய்தியாக இருந்தது.

# மீண்டும் இந்தியாவில் சிவிங்கிப் புலிகள்!

## மோடி பிறந்த தினத்தில் வனத்தில் சஞ்சாரம்



புதுடெல்லி,செப்.17

நமீபியாவில் இருந்து இன்று ராஜஸ்தானின் ஜெய்ப்பூருக்கு சரக்கு விமானத்தில் சிவிங்கிப் புலிகள் (ளீஜுளளமிழிஜுவி) கொண்டு வரப்பட்டன.


இந்தியாவில், வேட்டையாடுதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 'சீட்டா' ரக சிவிங்கிப் புலிகள் இனம் அழிந்து விட்டது. இந்த சிவிங்கிப் புலிகள் இனம் முற்றிலும் அழிந்து விட்டதாக கடந்த 1952 ஆம் ஆண்டு அரசு அறிவித்தது.

அதே நேரம் இந்த சிவிங்கிப் புலிகள் இனத்தை மீண்டும் இந்தியாவில் அறிமுகப்படுத்துவதற்காக தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் ஒரு பகுதியாக ஆபிரிக்க நாடான நமீபியாவில் இருந்து சிவிங்கிப் புலிகள் பெறுவதற்கு ஒப்பந்தம் போடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி 8 சீட்டா ரக சிவிங்கிப் புலிகள் இந்தியாவுக்கு நமீபியா வழங்கியது. அதன்படி 5 பெண் மற்றும் 3 ஆண் சிவிங்கிப் புலிகள் அடங்கிய இந்த குழு, விமானம் மூலம் நமீபியாவில் இருந்து இன்று ராஜஸ்தானின் ஜெய்ப்பூருக்கு சரக்கு விமானத்தில் கொண்டு வரப்பட்டன.

ஜெய்ப்பூருக்கு வந்துள்ள இந்த சிவிங்கிப் புலிகள் பின்னர் அங்கு இருந்து ஹெலிகாப்டரில் மத்திய பிரதேசத்தின் குனோ தேசிய பூங்காவுக்கு கொண்டு செல்லப்பட்டன. இந்த 8 சிவிங்கிப் புலிகள் களில் 3 புலிகளை குனோ தேசிய வனப் பூங்காவில் பிரதமர் மோடி தமது பிறந்த தினமான இன்று காலை 10.45 மணியளவில் விடுவித்தார்.

இதுகுறித்து சிவிங்கிப் புலி திட்டத்தின் தலைவர், எஸ்.பி. யாதவ் கூறுகையில், இந்தியா வர இருக்கிற 8 சிவிங்கிப் புலிகளில் 3 மட்டுமே பிரதமர் மோடியால் அவைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் திறந்து விடப்பட்டன. மீதமுள்ள 5 சிவிங்கிப் புலிகளும் அவைகளுக்கான ஒதுக்கப்பட்ட மற்றொரு இடத்தில் திறந்து விடப்படும் என்று தெரிவித்தார்.

# மோடியின் பிறந்த தினத்துக்கு மணற் சிற்பத்தில் வாழ்த்துரை




புவனேஷ்வர்,செப்.17

ஒடிசாவைச் சேர்ந்த புகழ்பெற்ற மணல் சிற்பக் கலைஞரான சுதர்சன் பட்நாயக், பிரதமர் நரேந்திர மோடியின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு ஒடிசாவின் பூரி கடற்கரையில் பிரதமர் மோடியின் 5 அடி உயர மணல் சிற்பத்தை உருவாக்கினார். 5 டன் அளவு மணல் பயன்படுத்தப்பட்டு இந்த மாபெரும் மணல் சிற்பம் கடற்கரையில் உருவாக்கப்பட்டுள்ளது. அதில் 'பிறந்தநாள் வாழ்த்துக்கள் மோடி ஜி' என்ற வாசகத்தை எழுதியுள்ளார் 1,213 மண்பாண்ட தேநீர் கோப்பைகளை கொண்டு சிற்பத்தை அழகு படுத்தியுள்ளார். சுதர்சன் பட்நாயக் கூறுகையில், பிரதமர் மோடி ஒரு தேநீர் விற்பவராக இருந்தது முதல் நாட்டின் பிரதமர் வரையிலான பயணத்தை காட்ட இந்த மண்பாண்ட தேநீர் கோப்பைகளை பயன்படுத்தியுள் ளோம். எனது கலை மூலம் பிரதமருக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன் என்றார்.

# தவறுதலாக வந்த பணத்தில் ரூ.5 லட்சம் ஈட்டிய கில்லாடி!


ஆமதாபாத்,செப்.17

குஜராத்தை சேர்ந்த ஒருவரது டிமேட் கணக்கில், ரூ.11,677 கோடி தவறுதலாக வரவு செய்யப்பட்டு அன்று இரவே பணம் மீண்டும் எடுக்கப்பட்டுவிட்டது. இடைப்பட்ட நேரத்தில், ரூ.2 கோடியை பங்குசந்தையில் முதலீடு செய்து, அதில் ரூ.5 லட்சம் பார்த்துள்ளார் அந்த பலே கில்லாடி.

குஜராத் மாநிலம் ஆமதாபாத்தை சேர்ந்தவர் ரமேஷ் சாகர். பங்குவர்த்தகத்தில் கடந்த 6 ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறார். அவரது டிமேட் கணக்கில், கடந்த ஜூலை 26 ஆம் திகதி, ரூ.11 ஆயிரத்து 677 கோடி வரவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய தொகையை கண்டும் பதற்றப்படாமல், அந்த தொகையிலிருந்து ரூ.2 கோடியை பங்கு சந்தையில் உடனடியாக முதலீடு செய்திருக்கிறார்.

அதிலிருந்து அன்றைய நாளில், ரூ.5 லட்சம் லாபம் பார்த்துள்ளார். தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, தவறாக பணம் வரவு செய்யப்பட்ட தகவலை தெரிவித்து, அன்றைய இரவு மீண்டும் பணத்தை வங்கி திரும்ப பெற்றுவிட்டது. இடைப்பட்ட 8 மணி நேரத்தில், ரமேஷ் சாகர் தனது புத்திசாலிதனத்தால் ரூ.5 லட்சம் சம்பாதித்திருக்கிறார்.

சமீபத்தில், அமெரிக்காவை சேர்ந்த ஒருவரது வங்கி கணக்கில், இப்படி தவறுதலாக ரூ.50 பில்லியன் டாலர் வரவு வைக்கப்பட, அவர், சில மணி நேரம், உலக பில்லியனர் பட்டியலில் 25 ஆவது இடம் பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வேறு நாட்டிடம் தஞ்சம் கோரி ஓடித்தோடிய முன்னாள் ஜனாதிபதி நாட்டுக்கே வந்துள்ளார்

## அஷ்ரப் நினைவு தின நிகழ்வில் ரவூப் ஹக்கீம் உரை







(பைசல் இஸ்மாயில்)

தலைவரை இழந்துவிட்டோம் என்ற துக்க எம்மை வாட்டி வதைத்தாலும், அவரின் அந்த இடத்தை மிக நேர்த்திய முறையில் செய்து வருகிறோம். பெருந்தேசிய கட்சிகளும் அச்சம் கொள்ளும் அளவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும், தலைமையும் தனது பலத்தை நிரூபித்து வருகின்றன. நாட்டை சரியான முறையில் நிர்வகிக்க முடியாமல் நாட்டை விட்டு வேறு நாட்டிடம் தஞ்சம் கோரி ஓடிய முன்னாள் ஜனாதிபதி இன்று எமது நாட்டுக்கே வந்துள்ளார். அந்தளவு பல அவமானங் களைச்சந்தித்தஜனாதிபதியாகவும்அவர்இருந்துள்ளார் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 ஆம் திகதி ஹெலிக்கொப்டர் விபத்தில் அகால மரணம டைந்தார். ஸ்தாபகத்தலைவர் அஷ்ரப்பின் 22 ஆவது வருட நினைவு தின நிகழ்வும், விடே துஆப் பிரார்த் தனையும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அட்டா ளைச்சேனை மத்திய குழுவினரால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகவில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

பெரும் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் இருந்த காலப்பகுதியில் அட்டாளைச்சேனைக்கு எந்த விதமான அரசியல் தலைமையும் கிடைக்கவில்லை. நான் இருந்த காலப்பகுதியிலேயே பிரதேச சபை தவிசாளர் என்றும், மாகாண சபை உறுப்பினர் என்றும், மாகாண அமைச்சர் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பல பதவிகளை வழங்கியுள்ளேன்.

முஸ்லிம் காங்கிரஸ் என்னும் அரசியல் பேரியக்கம் உருவாக்கப்பட முன்பு முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஒற்றுமையின்றி பிரதேசவாதம் தலைதூக்கி இருந்தது. எதற்கெடுத்தாலும் பிரதேசத்தினை

மையமாக கொண்ட அரசியல் கலாசாரம் அன்று இருந்தது. இவ்வாறு பிரதேச ரீதியாக பிளவுபட்டுக் கிடந்த முஸ்லிம் மக்களை ஒன்றிணைப்பது சிரமமான விடய மாகக் காணப்பட்டது. அப்போதுதான் மு.கா என்ற பேரியக்கம் ஆரம்பமானது. மு.கா.வின் வரலாறையும், வந்த தடத்தையும் தடயங்களையும் முற்றாக அழிப்பதென்ற பேரினவாதிகளின் நிகழ்ச்சி நிரலை தகர்த்தெறிந்து மீட்பதென்பது இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் பெரும் சவாலாக மாறி வருகிறது.

மர்ஹூம் அஷ்ரப் மூவின சமூகத் தலைவர்களுடனும் நெருங்கிய உறவைப் பேணினார். பெரும்பான்மை கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை ஆட்சியின் பங்காளியாக கொண்டு தேசியக் கட்சிகள் ஆட்சி நடத்தின. இவ்வாறு ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாகவும், முஸ்லிம்களின் முகவரிக் கட்சியை மாற்றியமைத்த ஒருவர்

மர்ஹூம் அஷ்ரபாகும் – என்றார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் அமைச் சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, கட்சியின் ஸ்தாபக செயலாளரும், பிரதித் தலைவருமான சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர், பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம்.உவைஸ், கட்சியின் உயர்பீட உறுப்பினர் யூ.எல்.ஏ.வாஹிட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சிறார் பிக்குகள் மீது துஷ்பிரயோகம்

# கைதான விகாராதிபதிக்கு 23 வரையும் விளக்கமறியல்



(பாறுக் ஷிஹான்)

சிறார் பிக்குகள் மீதான பாலியல் துஷ் பிரயோகம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட பிரதம பௌத்த மதகுரு தொடர்பிலான பிணை கோரிக்கை மறுக்கப்பட்டு எதிர்வரும் செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி வரை 07 நாள்கள் மேலும் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஹாரை ஒன்றில் வைத்து 3 சிறார் பிக்குகளைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பிலான வழக்கு நேற்று கல்முனை நீதிமன்றத்தில் நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் சந்தேக நபரான பௌத்த மதகுருவை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டம் சடயந்தலாவை பகுதி ஒரு குடும்பத்தை சேர்ந்த 3 சிறார் பிக்குகள் கல்முனை பகுதி விஹாரை ஒன்றில் வைத்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் ஒன்றின் அடிப்படையில் செப்டம்பர் 13 ஆந் திகதி கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதியான ரண் முத்துக்கல சங்கரத்ன தேரர் என்றழைக்கப்படும் பிரதான பௌத்த மதகுரு அம்பாறை மாவட்ட சிறுவர், பெண்கள் விசேட பிரிவினரால் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு கல்முனை நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டிருந்தார்.

அப்போது சந்தேக நபரை செப்டம்பர் மாதம் 16 ஆந் திகதி வரை 3 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

நேற்று இவ்வழக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட போது இரு தரப்பினர் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளின் நீண்ட நேர சமர்ப் பணங்கள் தந்து விண்ணப்பங்கள் செய்தனர். பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவ அறிக்கை இதுவரை மன்றிற்கு கிடைக்கப்பெறாமை, சம்பவம் தொடர்பிலான விசாரணை பூரணப் படுத்தப்படாமை ஆகியவற்றை கருத்திற் கொண்டு சந்தேக நபரான தேரரின் பிணை கோரிக்கை மறுக்கப்பட்டது. மீண்டும் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார்.

## வன்முறைத் தீவிரவாதத்திற்கு எதிராக மாணவர்களை வழிப்படுத்தும் திட்டம்

### அம்பாறையின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளில்





(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 05 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வன்முறைத் தீவிரவாதத்திற்கு எதிராக மாணவர்களின் மீள் தன்மையை வளர்ப்பதற்குரிய சூழலை உருவாக்கும் நேக்கில் பல வேலைத்திட்டங்கள் நீநிநுபும் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில், இறக்காமம் பிரதேச செயலக பிரிவிலும் இவ் வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வு இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நீநிநுபும் நிறுவனத்தின் உயரதிகாரிகள் கலந்துகொண்டு இவ் வேலைத் திட்டம் பற்றிய அறிமுகத்தை வழங்கி வைத்தனர்.

சர்வதேச அரச சாற்பற்ற நிறுவனமான Helvetas இன் நிதி உதவியுடனும் வழிகாட்டலோடும் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இந்நிகழ்வில் இறக்காமம் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார், கிராம நிலதாரி களின் நிர்வாக உத்தியோகத்தர் இந்திர ஸ்ரீ ஹெரேத் பண்டார மற்றும் செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மண்டூர் முதல் வெருகல் வரையான ஆன்மீகப் பாதயாத்திரை பூர்த்தி





(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை நடத்தும் மண்டூர் தொடக்கம் வெருகல் வரை இந்து சமயஆன்மீகபாதயாத்திரைவெருகல்சித்திரவேலாயுத ஆலயத்தை நேற்று முன்தினம் வியாழக்கிழமை சென்றடைந்தது. திருகோணமலை – மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் அமைந்துள்ள வெருகல் சித்திரவேலாயுத ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையால் ஆன்மீக பாத யாத்திரை வருடா வருடம் இடம்பெற்று வருகின்றது. மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவரும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் தலைமை யில் நடைபெற்ற ஆன்மீக பாத யாத்திரையில் மட்டக் களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் ஆயிரத் துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆன்மீக பாத யாத்திரையில் கலந்து கொண்ட பக்தர்கள் கையில் நந்திக்கொடி ஏந்தி அரோகரா கோசத்துடன் செல்லும் வீதியிலுள்ள ஆலயங்களை தரிசித்து வந்தடைந்தனர்.

மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து முந்திய வாரம் வெள்ளிக்கிழமை ஆரம்பமான ஆன்மீக பாத யாத்திரை வியாழக்கிழமை மாலை வெருகல் சித்திரவேலாயுத ஆலயத்தை வந்தடைந்தது.

ஆலயத்தினை வந்தடைந்த யாத்திரிகை பக்தர்கள் ஆலய கங்கையில் நீராடி தங்கள் வேண்டுதலை நிறைவேற்றினர்.

## சர்வதேச புத்தக கண்காட்சி கொழும்பில் நேற்று ஆரம்பம்

கொழும்பு சர்வதேச புத்தகக் கண் காட்சி நேற்று (வெள்ளிக்கிழமை) கொழும்பில் உள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண் டப வளாகத்தில் ஆரம்பமாகியுள்ளது.

இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி இலங்கையில் நடைபெறும் 23 ஆவது கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியாகும்.

இந்த புத்தகக் கண்காட்சி நேற்று முதல் செப்ரெம்பர் 25 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை நடைபெறுகிறது.

கொழும்பு சர்வதேச புத்தகக் கண் காட்சி நேற்று காலை கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்கவால் திறந்து வைக்கப்பட்டது.

கொரோனா தொற்றுநோய் காரணமாக கடந்த ஆண்டு நடத்த முடியாதமையால், இந்த ஆண்டு புத்தகக் கண்காட்சியில் 400 இற்கும் மேற்பட்ட உள்ளூர் மற்றும் சர்வதேச புத்தகக் கடைகள் சேர்க் கப்பட்டுள்ளன. பொதுப் போக்குவரத்து பிரச்சி னை கள் காரணமாக, புத்தகக் கண்காட்சி இரவு 7 மணிக்கு முடிவடையும் அதே நேரத்தில் சுகாதார அமைச்சகம் வழங்கிய கொரோனா விதிமுறைகளைக் கண்டிப் பாக கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

புத்தகக் கண்காட்சியை முன்னிட்டு பம்பலப்பிட்டி, கொழும்பு - கோட்டை மற்றும் மருதானை ரயில் நிலையங்களில் இருந்தும் விசேட பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.




## நாவிதன்வெளியில் பயனாளிகளுக்கு உலர் உணவு பொதிகள் விநியோகம்






(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நாவிதன்வெளி பிரதேச செயல கத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனா ளிக ளுக்கு 'இஸ்லாமிக் ரிலீஃப்' அரச சார்பற்ற நிறுவனத்தால் வாழ்வாதார உதவி திட்டங்கள் வழங்கப்பட்டு வரு கின்றன. இதன் ஒரு கட்டமாக பயனாளி களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு பிரதேச செய லாளர் எஸ் ரங்கநாதன் வழிகாட்டலில் நேற்று பிரதேச செயலகத்தில் நடை பெற்றது.

மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ்.சிபாயாவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலக நிர்வாக அதிகாரி கே. யோகேஸ் வரன் அதிதியாக கலந்து கொண்டார்.

சுயதொழில் ஊக்குவிப்பு வேலை திட்டத்தின் கீழ் இவ்வாறு தெரிவு செய்யப் பட்ட பயனாளிகளுக்கு சுமார் 80,000 ரூபா பெறுமதியான சுயதொழில் உதவி திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் கொவிட் –19 மற்றும் பொருளா தார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட் டுள்ள இந்த பயனாளிகளுக்கு வாழ் வாதார உதவிகளை வழங்கும் வேலை திட்டத்தின் கீழ் 10 ,000 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் இங்கு வழங்கப்பட்டன.

இஸ்லாமிக் ரிலீஃப் நிறுவனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.எச்.சுபுஹான், திட்ட உத்தியோகத்தர் ரி.ரமேஷ், உளவளத்துணை ஆலோசகர் ஏ. சுதர்சன் உட்பட மகளிர் அபிவிருத்தி பிரிவில் கடமையாற்றும் உத்தி யோகத்தர்கள், பிரதேச செயலக உத்தி யோகத்தர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.09.2022இல் வெளியிடப்பெற்றது.